ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதி விசேஷமானது

අංක 2447/18 - 2025 ජූලි මස 29 වැනි අඟහරුවාදා - 2025.07.29
2447/18 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு யூலை மாதம் 29 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

38 ஆம் பிரிவு (அ) வின் கீழான கட்டளை

**2025 ஆம் ஆண்டின் 73 ஆம் இலக்கக் கட்டளை**

எனது குறிப்பு இல.: 13/96/FR/480.
பிரதேச செயலாளர் குறிப்பு இல.: KDS/MDB/4/2/1/71/03.

காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 38 ஆம் பிரிவு (அ) வினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் குரகமகே தொன் லால் காந்த ஆகிய நான், இங்கு கீழ்க் காணும் அட்டவணையின் I ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட காணி எடுத்தல் உத்தியோகத்தருக்கு அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் உத்தியோகத்தரொருவருக்கு அவ் அட்டவணையின் நேரொத்த II ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட காணியின் இருப்பாட்சியை பொறுப்பேற்பதற்கு இத்தால் கட்டளையிடுகின்றேன்.

கே.டி லால் காந்த,
கமத்தொழில், கால்நடை வளங்கள்,
காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர்.

கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும்
நீர்ப்பாசன அமைச்சு,
“மிஹிகத்த மெதுர”,
காணிச் செயலகம்,
இல. 1200/6, இரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை.
2025, யூலை 23.

**அட்டவணை**

I. **காணி எடுத்தல் உத்தியோகத்தர் :** பிரதேச செயலாளர், மெதகும்பர.

II. **காணியின் விபரம் :** மேல் மாகாணம், கண்டி மாவட்டம், மெதகும்பர பிரதேச செயலாளர் பிரிவில், உடசிய பற்று தெற்கு கோறளே சிறு பிரிவில் மாங்கொட கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தால் தயாரிக்கப்பட்ட இல ஆ.வ.மஹ 5761, 2008.03.26 ஆந் திகதிய ஆரம்ப வரைபடத்தில் விபரமாக காட்டப்பட்ட பின்வரும் பெயர்கள், விஸ்தீரணங்களைக் கொண்ட காணித் துண்டுகளின் எல்லைகள் :

**01. துண்டு இல. 1 – போகஹமுல ஹேன - விஸ்தீரணம்: 0.3246 ஹெக்டயார்**
வடக்கு: ஆ.வ. A 253 இல் துண்டு இல. 10, நாதுநனஹின்ன ஹேன (உ. வ 53963) மற்றும் ஆ.வ. A 253 இல் துண்டு இல. 6; கிழக்கு: ஆ.வ. A 253 இல் துண்டு இல. 6, 7 மற்றும் ஜே.எம். அபேவர்த்தனவுக்கு சொந்தமான கலஅஸ்ஸே ஹேன; தெற்கு: ஜே.எம் அபேவர்த்தனவுக்கு சொந்தமான கலஅஸ்ஸே ஹேன ஆ.வ. A 253 இல் துண்டு இல. 8,6 மற்றும் ஆ.வ.மஹ 5585 இல் துண்டு இல.1; மேற்கு: ஆ.வ. A 253 இல் துண்டு இல. 10.

**02. துண்டு இல. 2 – போகஹமுல ஹேன - விஸ்தீரணம்: 0.0327 ஹெக்டயார்**
வடக்கு: ஆ.வ. A 253 இல் துண்டு இல. 10 மற்றும் 8 கிழக்கு: ஆ.வ..A 253 இல் துண்டு இல. 8 மற்றும் ஜே.எம். அபேவர்த்தனவுக்கு சொந்தமான வடுவாவல கும்புரே வனாத; தெற்கு: ஜே.எம். அபேவர்த்தனவுக்கு சொந்தமான வடுவாவல கும்புரே வனாத; மேற்கு: ஆ.வ. A 253 இல் துண்டு இல. 10.

EOG 07-0343


*இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

38 ஆம் பிரிவின் காப்பு வாசகம் (அ) வின் கீழான கட்டளை

**2025 ஆம் ஆண்டின் 75 ஆம் இலக்கக் கட்டளை**

எனது குறிப்பு இல.: 4-3/16/2019/UDA/251.
பிரதேச செயலாளர் குறிப்பு இல.: මහ/ඉ/අත්/377.

காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் குரகமகே தொன் லால் காந்த ஆகிய நான், இங்கு கீழ்க் காணும் அட்டவணையின் I ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட காணி எடுத்தல் உத்தியோகத்தருக்கு அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் உத்தியோகத்தரொருவருக்கு அவ் அட்டவணையின் நேரொத்த II ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட காணியின் உடைமையை பொறுப்பேற்பதற்கு இத்தால் கட்டளையிடுகின்றேன்.

கே.டி லால் காந்த,
கமத்தொழில், கால்நடை வளங்கள்,
காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர்.

கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும்
நீர்ப்பாசன அமைச்சு,
“மிஹிகத்த மெதுர”,
காணிச் செயலகம்,
இல. 1200/6, இராஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை.
2025, யூலை 24.

### அட்டவணை

**I. காணி எடுத்தல் உத்தியோகத்தர் :** பிரதேச செயலாளர், மஹரகம.

**II. காணியின் விபரம் :** மேல் மாகாணத்தில் கொழும்பு மாவட்டத்தில் மஹரகம பிரதேச செயலாளர் பிரிவில், 493. களல்கொட கிராம அலுவலர் பிரிவில், களல்கொட கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட இல. CO/MHR/2018/774 மற்றும் 2018.12.20 ஆம் திகதிய முதற்சுவட்டு வரைபடத்தில் பின்வரும் பெயர் மற்றும் விஸ்தீரணத்தைக் கொண்ட காணித்துண்டின் எல்லைகள் பின்வருமாறு :

**01. துண்டு இல. 1 – இகுருவத்தை தெனிய - விஸ்தீரணம்: 1.0066 ஹெக்டயார்**

வடக்கு: கால்வாய் மற்றும் காவிந்த ராஜித மைதிறி உரிமைகோரும் வரி மதிப்பீட்டு இல. 65/66, களல்கொட வீதி; கிழக்கு: நகர அபிவிருத்தி அதிகாரசபை உரிமைகோரும் ஜின்ஜர்ஹேனவத்தை, கால்வாய் மற்றும் ஆர். ரஞ்சனி உரிமைகோரும் மில்லகஹவத்தை; தெற்கு: வீதி மற்றும் லலித் சந்திரரத்ன உரிமைகோரும் மில்லகஹவத்தை மற்றும் ஜயகத் மாவத்தை; மேற்கு: கால்வாய்.

EOG 07- 0344